2020 மார்ச் 11]

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்ற பகுதியாகும். எனவே, அங்கே சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோலையாறு பகுதியில் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் உரிய கருத்துருவினைப் பெற்று, சுற்றுலாத் துறையின் மூலம் நிதி ஒப்பளிப்பு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

பேருந்து வசதி

***26101—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை மற்றும் திருவனந்தபுரம் வழியாக எர்ணாகுளத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியிலிருந்து எர்ணாகுளம் (வழி) நாகர்கோவில், மார்த்தாண்டம், களியக்காவிளை, திருவனந்தபுரம்

[*2020 மார்ச் 11*

தடத்தில் தற்போது இரண்டு கேரள அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. இந்த வழித்தடம் இரு மாநில ஒப்பந்த நடவடிக்கைக்குட்பட்டது. தற்போதைய கோரிக்கையில் உள்ள மார்த்தாண்டம்–களியக்காவிளை வரையிலான தமிழ்நாடு பகுதியின் தட நீளம் வெறும் 7 கி.மீ. ஆகவும், மீதமுள்ள கேரளா பகுதியான களியாக்காவிளை–எர்ணாகுளம் தட நீளம் 255 கி.மீ. ஆகவும் உள்ளது. நாகர்கோவில் மண்டலத்தை பொறுத்தமட்டில், நாகர்கோவில்–திருவனந்தபுரம் 70 கி.மீ. இரு மாநில வழித்தட நீளத்தில் 35 பேருந்துகள்மூலம் தினசரி 210 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கு இணையாக கேரள அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளைப் பயன்படுத்தி திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து எர்ணா குளத்திற்குச் செல்ல தேவைக்கேற்ப கேரள அரசுப் பேருந்துகள் உள்ளன. இது தவிர, தற்போது இரு மாநில ஒப்பந்த அடிப்படையில், அரசு ஒப்புதல் பெறப்பட்டு, நாகர்கோவில்–திருவனந்தபுரம் என 3 பேருந்துகள் மூலமாக 18 சுற்றுகளும், கன்னியாகுமரி–திருவனந்தபுரம் (வழி–நாகர்கோவில்) என 2 பேருந்துகள் மூலமாக 8 சுற்றுகளும் ஆக 26 சுற்றுகள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வார இறுதி நாட்களான சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், திங்கட்கிழமையிலும் பயணிகளின் பயன்பாட்டினை அனுசரித்து கூடுதலாக 3 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியின் இதயமாக விளங்கும் கன்னியாகுமரி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கிக்கொண்டிருக்கும் மார்த்தாண்டத்திலிருந்து சென்னை, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு* S.E.T.C. *சார்பில் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், மார்த்தாண்டத்திலிருந்து* S.E.T.C. *சார்பில் எர்ணாகுளத்திற்கு பஸ்கள் இயக்கப்பட வேண்டுமென்பது தொடர்ந்து மக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அருமனை, பனச்சமூடு, களியல் மற்றும் குலசேகரம் போன்ற ஊர்களிலிருந்து*

2020 மார்ச் 11]

விடுவிக்கப்படும் தரமான இரப்பர் வெளியூர்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு சந்தைப்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மேற்கு மாவட்ட இரப்பர் விவசாயிகள் மற்றும் சிறு இரப்பர் வணிகர்கள் கேரள மாநிலம், கோட்டயம் பகுதியில் இருக்கக்கூடிய இரப்பர் வாரிய அலுவலகத்திற்கும், எர்ணாகுளம், கொச்சியிலுள்ள இரப்பர் வணிகச் சந்தைக்கும் அடிக்கடி சென்று வரவேண்டியுள்ளது. புதுக்கடை, கூட்டாலுமூடு, பைங்குளம் போன்ற ஊர்களிலுள்ள பொது மக்கள் ஆலப்புழா, எர்ணாகுளம், கொச்சி போன்ற பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்னரே வணிகம் செய்து வருகின்றனர். குறிப்பாக, கயிறு, கருப்பட்டி போன்ற பொருட்களை வணிகம் செய்து வருகின்றனர். குளச்சல், வாணியக்குடி, குறும்பனை பகுதிகளிலுள்ள மீனவப் பெருங்குடி மக்கள் கேரள மாநிலம், எர்ணாகுளம் மற்றும் கர்நாடக மாநில பகுதிகளுக்கும் மீன் பிடிப்பதற்காகச் சென்று வருகிறார்கள். விவசாயப் பெருமக்கள், வணிகர்கள், மீனவர்கள், I.T. துறையில் பணியாற்றுபவர்கள் என்று பல்வேறுதரப்பட்ட மக்கள் எர்ணாகுளம் மற்றும் கொச்சி, கோட்டயம் பகுதிகளுக்கு தொடர்ந்து சென்று வருகிறார்கள். பெங்களூருக்கு நாம் இங்கிருந்து பேருந்துகளை இயக்க முடிகிறது. கேரளாவில் பேருந்துக் கட்டணம் அதிகமாக உள்ளது. (குறுக்கீடு) நான்தான் சொல்கிறேனே, அங்கு கட்டணம் அதிகமாகத்தான் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில்தான் உள்ளது. அது கேரள மாநிலத்தில் இல்லை. தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. அதை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் கேரள பேருந்துகளில் போய் வாருங்கள் என்று நீங்கள் சொல்வது தவறு. (குறுக்கீடு) அதாவது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். தேவையில்லாததை நீங்கள் பேசாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறது. களியக்காவிளை—எர்ணாகுளம் பேருந்து தடத்தில் 255 கிலோ மீட்டர் கேளராவிலும், 7 கிலோ மீட்டர் தமிழ்நாட்டிலும் வருகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். பெங்களூருவும் அடுத்த மாநிலத்தில்தான் இருக்கிறது. அங்கு செல்லவும் நிறைய கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அங்கு நமது மாநில பேருந்துகள் போய் வருகின்றன. நான் ஏன் நம்முடைய மாநில பேருந்துகளைக் கேட்கிறேனென்றால், ஒரு

பக்கம் தமிழ்நாடு பேருந்துகள், இங்கிருந்து போகிற தமிழ்நாட்டு மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும். அங்கு கேரள மாநிலத்தவர்கள் use செய்கிறார்களோ இல்லையோ, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அதிகமாக தமிழ்நாட்டுப் பேருந்துகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம். 42 பேருந்துகள் எனது தொகுதிக்கு வந்துகொண்டிருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு துணைக் கேள்வி உள்ளது. கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டு, முடியுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சுருக்கமாகக் கேட்டு, முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: ஆகையால், தமிழ்நாட்டிலிருந்து பேருந்துகள் இயக்க கோரிக்கை வைப்பது மக்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும். குறிப்பாக எங்கள் மாவட்ட மக்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் என்பதால், அவசியமாக இந்தப் பேருந்துகளை இயக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய வழித்தடம் இரு மாநில ஒப்பந்தத்திற்கு உட்பட்டது. இருந்தாலும், அவர் சொல்வது தவறு. இரு மாநில ஒப்பந்தத்தின்படி கேரளாவிற்குள் பேருந்து செல்லும்போது அந்த மாநிலத்தில் என்ன பேருந்துக் கட்டணம் இருக்கிறதோ, அதைத்தான் கட்டணமாக நிர்ணயிக்க வேண்டுமென்பது ஒப்பந்தம். எனவே, இரு மாநிலப் பேருந்துகளுக்கு கட்டண விகிதம் என்பது ஒரேமாதிரியான அளவுதான் இருக்கும். இருந்தபோதிலும், இந்தியாவிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆளுகின்ற தமிழகத்தில்தான் குறைவான பேருந்துக் கட்டணத்திலே நிறைவான சேவை அளிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே

2020 மார்ச் 11]

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய வழித்தடத்தை ஆய்வு செய்து, பேருந்துகளில் பயணிகளின் அடர்வுக்கு ஏற்ப மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. அந்தவகையில், கிட்டத்தட்ட 42 பேருந்துகள் என்னுடைய தொகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கும், கேரளாவிற்குமிடையே இயக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இப்போது ஒப்பந்தம் என்ற காரணத்தை காண்பித்து 42 பேருந்துகளும் கைவிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், கேரள மாநிலப் பேருந்துகள் இங்கு வந்து செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நமக்கு வருமானம் குறைகிறது. இருந்தாலும், அடுத்த ஒப்பந்தத்தில் இதை நீங்கள் வலிமைப்படுத்த முடியுமா என்று பாருங்கள். குறிப்பாக, இப்போது புதிய* Red Buses*–ஐ தந்து கொண்டிருக்கிறீர்கள். ஆகையால், நாங்களும் நிறைய புதிய பேருந்துகள் எங்களுடைய தொகுதிக்கும், எங்கள் மாவட்டத்திற்கும் வர வேண்டுமென்று மிகவும் ஆசையாக இருக்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு பெரிய பட்டியலே வைத்திருக்கிறேன். மொத்தப் பட்டியலில் உள்ளதையும் உங்களால் கொடுக்க முடியாது. இருந்தாலும்கூட, முடிந்தவரை அந்தப் பேருந்துகளை அதிகமாக என்னுடைய தொகுதிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய கிராமங்களில், நிறைய வசூல் வருகின்ற இடங்கள் இருக்கின்றன. ஆனால், சில இடங்களில் பேருந்துகள் செல்வது இல்லை. சில இடங்களில் மிகவும் பழுதான பழைய பேருந்துகள் இருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது. அந்தப் பேருந்துகளைப் புதிய பேருந்துகளாக மாற்றிக் கொடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[2020 மார்ச் 11

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பொது பேருந்து வசதிகளை நம்பித்தான் மக்கள் இருக்கின்றார்கள். தனியார் பேருந்துகள் என்பதெல்லாம் அங்கு கிடையாது. பொது போக்குவரத்துதான் மக்களுடைய அடிப்படை போக்குவரத்துப் பயன்பாடாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய விளவங்கோடு தொகுதியில் அடிப்படையாகவே பொது போக்குவரத்து, அரசு பேருந்தை நம்பித்தான் இருக்கிறது.

அதேமாதிரி, சிற்றுந்து–small bus. என்னுடைய தொகுதியில் வழித்தடங்கள் குறுகலாக இருப்பதனால், அங்கு இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு 2 கேள்விகள். சுருக்கமாகக் கேட்டீர்களென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மற்றவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் இப்படி முதல் கேள்வி கேட்பதிலேயே அதிக நேரம் எடுத்துக் கொண்டால், மற்றவர்களுக்கு எப்படி வாய்ப்புத் தர முடியும்? உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: முடித்துவிடுகிறேன். அதாவது, புதிய பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள்–small bus–ம் இயக்க வேண்டுமென்று சொல்லி வெகு நாட்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கும் அவர் வழிவகை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் அதிக வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய நகரப் பேருந்துகளை புதிய Red Bus–களாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள், இதுவரை ஏழாயிரம் புதிய பேருந்துகளை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கி, புதுப் பொலிவுடன் அனைத்துப் பேருந்துகளும் சிறப்பாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே உங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களில், அதிக வருடங்களாக இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய அந்தப்

2020 மார்ச் 11]

பேருந்துகள் புதிய பேருந்துகளாக மாற்றி இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை நகரிலே குறுகலாக இருக்கக்கூடிய சாலைகளிலும் பொது மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டுமென்பதற்காக இந்தச் சிற்றுந்து வசதியை அறிமுகம் செய்தார்கள். அதை மற்ற பகுதிகளிலே இயக்கக்கூடிய வசதியில்லை. எனவே, சென்னையில் மட்டும்தான் அந்த சிற்றுந்து இயக்கப்படும். மற்ற பகுதிகளிலே நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) NRC–க்கு வழிவகுக்கும் தேசிய மக்கள் தொகை பதிவேடு சார்ந்த பணிகளை அமல்படுத்த மாட்டோம் என தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் சென்னை, வண்ணாரப்பேட்டையில் நடைபெறும் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் வருட குடியுரிமை திருத்தச் சட்டத்தின் பின்னணியில் எடுக்கப்படக்கூடிய NPR–ல் சிறுபான்மையினரும், அனைத்துத் தரப்பு மக்களும் அச்சத்திலே இருக்கிறார்கள். NPR 2020 படிவத்தில் கேட்கப்பட்டிருக்கக்கூடிய கேள்விகள், அதில் கணக்கெடுப்பாளர்கள் கேட்க வேண்டிய ஆவணங்களின் பட்டியல் குறித்த வழிகாட்டுதலெல்லாம் பொது மக்களிடம் இந்த அச்சம் ஏற்பட காரணமாக அமைந்திருக்கிறது. NPR 2020 படிவத்தில் இருக்கக்கூடிய சில கேள்விகளை தவிர்க்குமாறு மத்திய அரசுக்கு, நம்முடைய மாநில அரசு கடிதம் எழுதியிருப்பதாக ஏற்கெனவே